நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்,சேப்பாக்கம், சென்னை – 5.
முன்னிலை:– திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப,

ந.க.எண்.14489/2014/தி4(ஐடி) நாள்: 9 .07.2015.

பொருள்:– பணிக்குழு – திரு.கே.ரத்தினகுமார், பணி நீக்க புள்ளி விபரக் குறிப்பாளர் – பணி நீக்கம் செய்யப்பட்டது (Dismissed from Service) தண்டனை எதிர்த்து மேல்முறையீடு – தண்டனை ரத்து – மீள பணியமர்த்தி உத்தரவிடுதல் – தொடர்பாக.

படிக்கப்பட்டவை:–

1. நகராட்சி நிர்வாக ஆணையர், குற்றச்சாட்டு குறிப்பாணை கடித ந.க.எண்.40331/2011/ஐடி1, நாள்.10.09.2011.
2. இணை ஆணையர் (நிர்வாகம்) மற்றும் விசாரணை அலுவலர் அறிக்கை கடிதம் எண்.4/2011/துஉ(ஹ)
3. நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறைகள் ந.க.எண்.40331/2011/ஐடி1, நாள்.11.03.2014.
4. திரு.கே.ரத்தினகுமார், புள்ளி விபரக் குறிப்பாளர் (பணி நீக்கம்) மேல்முறையீட்டு மனு நாள்.04.04.2014
5. உயர்நீதிமன்றம் சென்னை நீதிப்பேராணை எண்.31306/2014–ன் மீதான 01.12.2014–ன் தேதிய தீர்ப்புரை
6. அரசு கடித எண்.8991/நப1/2014–3, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.24.11.2014.
7. இவ்வலுவலக இதே எண்ணிட்ட 11.05.2015–ம் தேதிய கடிதம்
8. அரசாணை (2ப) எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.10.06.2015.
9. திரு.கே.ரத்தினகுமார், பணிநீக்க புள்ளி விபரக் குறிப்பாளரது 12.06.2015 –ம் தேதிய விண்ணப்பம்.

*****

திரு.கே.ரத்தினகுமார், புள்ளிவிபரக்குறிப்பாளர், மறைமலை நகராட்சியில் பணிபுரிந்த காலங்களில் சொத்து வரியில் ஆணையரின் அனுமதியின்றி பெயர் மாற்றம் செய்தது குறித்து படிக்கப்பட்டவை 1–ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையரது 3 குற்றச்சாட்டுகள் பிறப்பிக்கப்பட்டது குற்றம் சாட்டப்பட்ட அலுவலரால் 02.11.2011–ல் தன்னிலை விளக்க அளிக்கப்பட்டது.

மேற்காணும் குற்றசாட்டகள் மற்றும் தன்னிலை விளக்கம் மீது விசாரணை செய்து அறிக்கை தாக்கல் செய்திட விசாரணை அலுவலர் நியமனம் செய்து விசாரணை அறிக்கை படிக்கப்பட்டவை 2–ல் காணும் கடித்தில் பெறப்பட்டதில், விசாரணை அலுவலர் 3–

குற்றச்சாட்டுகளும் நிரூபணமானதாக அறிக்கை அளித்ததின் பேரில் மற்றும் குற்றசாட்டப்பட்ட அலுவலரது 21.03.2012–ம் தேதிய கூடுதல் முகாந்திரங்களை நகராட்சி நிர்வாக ஆணையரால் ஆய்வு செய்து குற்றசாட்டுகளுக்கு தண்டனையாக பணி நீக்கம் (Dismissed from Service) செய்து ஆணையிடப்பட்டது.

பணிநீக்க தண்டனையை எதிர்த்து திரு.கே.ரத்தினகுமார் மேல்முறையீடு மனு பார்வை 4–ல் காணும் இவ்வலுவலக கடிதம் மூலம் அரசுக்கு அனுப்பப்பட்டது.

இச்சூழ்நிலையில் திரு.கே.ரத்தினகுமார் தனது மேல்முறையீட்டு மனுவினை பரிசீலனை செய்து உரிய உத்தரவு பிறப்பிக்க உயர்நீதிமன்றத்தின் நீதி பேராணை எண்.31306/2014–ல் வழக்கு தொடர்ந்து படிக்கப்பட்டவை 6–ல் காணும் 01.12.2014–ம் தேதிய தீர்ப்புரையில் தனியரின் மேல்முறையீடு மனுவினை பரிசீலித்து 12 வாரங்களுக்குள் உரிய ஆணை பிறப்பிக்க உத்தரவிடப்பட்டது.

படிக்கப்பட்டவையில் கண்ட ஆவணங்களை பரிசீலித்து திரு. கே.ரத்தினகுமார் (பணி நீக்க புள்ளி விபரக் குறிப்பாளர்) மேல்முறையீடு மனு தொடர்பாக அரசு ஆவண செய்து சொததுவரி பெயர் மாற்றம் நிகழ்வில் கடவுச்சொல் (Password) பல அலுவலர்களிடம் இருந்ததாக ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது என்றும், எனவே குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் ஒருவருக்கு மட்டுமே இந்நேர்வில் தவறிற்கான முழுப்பொறுப்பையும் சாட்ட இயலாது என்றும் எனவே, ஒழுங்குமுறை அதிகாரியால் பார்வை 3–ல் காணும் திரு.கே.ரத்தினகுமார் பணிநீக்க புள்ளி விபரக்குறிப்பாளர் மீது பிறப்பிக்கப்பட்ட தண்டனையான "பணிநீக்கம்" (Dismissal From Service) எனும் தண்டனையை ரத்து செய்து பார்வை 8–ல் காணும் அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

மேலும், அவ்வரசாணையால் இந்நேர்வு தொடர்பாக மீண்டும் ஒரு விரிவானதொரு விசாரணையினை ஏற்பாடு செய்து குற்றத்திற்கு காரணமான அனைத்து அலுவலர்கள் மீது பொறுப்பு நிர்ணயம் செய்து தேவைப்படின் குற்றசாட்டப்பட்ட அலுவலரும் பொறுப்பாக்கப்பட்டால் அவர் உள்பட மற்ற அனைவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை தொடர நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு திரு.கே.ரத்தினகுமார், பணிநீக்க புள்ளி விபரக் குறிப்பாளரை மீள பணியமர்த்திடவும், மேலும் ஆம்பூர் நகராட்சியில் காலியாகவுள்ள புள்ளி விபரக் குறிப்பாளர் பணியிடத்தில் பணியில் சேர அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

திரு.கே.ரத்தினகுமார், புள்ளி விபரக் குறிப்பாளரை பணியில் சேர அனுமதித்து ஆணை பிறப்பிக்குமாறு அதன் விவரத்தினை உடன் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு ஆம்பூர் நகராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

மேலும், இச்செயல்முறையினை பெற்றுக் கொண்டமைக்கான ஏற்பளிப்பினை மின்னஞ்சல் மற்றும் அஞ்சல் மூலம் அனுப்பி வைக்குமாறு ஆம்பூர் நகராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

ஒம்/– கோ.பிரகாஷ்,
நகராட்சி நிர்வாக இயக்குநர்.

பெறுநர்:–

1. திரு.கே.ரத்தினகுமார்,
   புள்ளி விபரக் குறிப்பாளர்
   ஆம்பூர் நகராட்சி
   (நகராட்சி ஆணையர், ஆம்பூர் மூலமாக)
2. ஆணையர்,
   ஆம்பூர் / மறைமலைநகர்
3. முதன்மைச்செயலர்,
   நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை – 9.

நகல்:–

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர்/செங்கல்பட்டு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர். 12/7/15

12/7/15